தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி அரசு கலை, அறிவியல் கல்லூரியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தின் முதல்கட்டமாக 7,033 மாணவர்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார். விழாவில் மாவட்ட ஆட்சியர் சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர், மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்டக் கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி மற்றும் ஏராளமான மாணவர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாமை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், அய்யப்பன்தாங்கல் ஊராட்சி, பெருமாள் கோயில் தெருவில் வீடு வீடாகச் சென்று இளைஞர்களை உறுப்பினர்களாக சேர்த்து துவக்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தாயுள்ளத்துடன் ஒரு தந்தையின் நிலையில் இருந்து

தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு திட்டங்களையும் தீட்டி வருகிறார் முதல்வர்!

தருமபுரி மாவட்டத்தில் "தமிழ் புதல்வன்" திட்டத்தை துவக்கி வைத்து - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

தருமபுரி ஆக 11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் அரசு கலைக்கல்லூரியில், தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட, அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தை துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் 68 கல்லூரிகளில் பயிலும், 7,033 மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூபாய் 1000/- க்கான பற்று அட்டைகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 1928 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக தொடங்கிவைக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் தருமபுரி மாவட்டத்தில் 2784 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அவர்வழியில் நல்லாட்சி செலுத்தும் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 2ம் கட்டம் ரூபாய் 7 ஆயிரத்து 890 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்து, இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூலம் தருமபுரி மாவட்டத்திலுள்ள 2828 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட உள்ளது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயணச்சலுகைகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். இதன் மூலம் இன்றும் மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். நமது முதலைமைச்சர் இது போன்ற சிறப்பான திட்டங்களை நாட்டிறவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விழா பேரூரை ஆற்றிய போது தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியறிவும் பொருளாதார சுதந்திரமும் பெண்களின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியம் என்பதை உணர்ந்து, அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்க்கல்வி சேர்க்கை மிகக்குறைவாக இருப்பதை கருத்தில் கொண்டும் அரசு பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதம் ரூபாய் ஆயிரம் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வழங்கும் "புதுமைப் பெண் திட்டத்தை கடந்த 5.9.2022 அன்று துவக்கி வைத்தார். புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயிலும் சுமார் 3.28 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை 34 சதவீதம் உயர்ந்துள்ளது. புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 16,842 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்கென தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டமானது மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதையடுத்து, 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம்" பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது போல், அரசு பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும், "தமிழ்ப் புதல்வன்" எனும் மாபெரும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள், பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.இதனைதொடர்ந்து, தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் (09.08.2024) அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் துவக்கி வைத்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் பாப்பிரெட்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் துவக்கி வைக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 68 கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும், 7033 மாணவர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் நிதி உதவி வழங்கும் விதமாக, இவ்விழாவில் 358 மாணவர்களுக்கு இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் நிதி உதவி என்பது மிகச்சிறந்த உதவித்தொகையாகும். மாணவர்களுக்கான எதிர்கால வாழ்விற்கான ஒரு முதலீடாக இருக்க வேண்டும் என்று இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்.இந்நிதி உதவியை மாணவர்கள் சேமிப்பாக வைத்து, மேலும் உயர்கல்விக்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். புத்தகங்கள் வாங்குவது, கல்வி சார்ந்த விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்தி தங்களின் உயர்கல்விக்கு உத்திரவாதமாக இந்நிதியை பயன்படுத்த வேண்டும். அறிவு சார்ந்த சமுதாயமாக தாம் உருவாகுவதற்கு இந்நிதியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிதியை கொண்டு ஏதேனும் போட்டித் தேர்வுகளுக்கு தேவையான நல்ல புத்தகங்களை வாங்கி படிக்கலாம். உங்களுக்கு ஒரு வெல்கம் கிட் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் வழிகாட்டுதல் கையேடும், பொருளாதாரம் சம்பந்தமான குறிப்புகளுடன் கூடிய புத்தகமும் உள்ளது. இவற்றை நீங்கள் முழுமையாக படித்து பயன்பெற வேண்டும். மாணவர்கள் சிறந்த கல்வியை கற்றால் அவர்கள் சுயமாக தொழில் செய்து முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்பாகவும், வேலைவாய்ப்பு பெறவும் உறுதுணையாக அமையும். மாணவர்கள் தங்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தேவையான ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை உருவாக்கி கொள்ள வேண்டும். நீங்கள் மனது வைத்தால் எதையும் சாதிக்கலாம். எளிதில் வெற்றி அடையலாம். மேலும், தருமபுரி மாவட்டத்தில் கு அளித்து ஒரு பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து, தாயுள்ளதுடன், ஒரு தந்தையாகவும் செயல்பட்டு நாட்டின் வளர்ச்சியில் இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட சிறந்த மாநிலமாக தமிழ் நாட்டை மாற்றி இருக்கிறார். இன்று, தருமபுரி மாவட்ட மாணவர்கள் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் ரூபாய் 1000 நிதி உதவியினை உயர்கல்விக்கு உத்திரவாதமாக நீங்கள் பயன்படுத்தி கொண்டு, உயர்ந்த இடத்தை அனைவரும் எட்ட வேண்டும், உயர் கல்வி என்பதை உங்கள் இலக்காக கொண்டு வாழ்வில் வெற்றியடைய வேண்டும் என்று பேசினார்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் செ. பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.என்.பி.இன்பசேகரன், மேற்கு மாவட்ட அவைத்தலைவர் மனோகரன், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஜோதி சந்திரா, மாவட்ட சமூக அலுவலர் திருமதி.ச.பவித்ரா, வருவாய் கோட்டாட்சியர் வில்சன் ராஜசேகர், கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர் திருமதி.பா.சிந்தியா செல்வி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராமஜெயம், ஒன்றிய குழு தலைவர் திருமதி.உண்ணாமலை குணசேகரன், வட்டாட்சியர் திருமதி. வள்ளி, கல்லூரி முதல்வர் ரவி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.கழக இளைஞர் அணி 5வது மண்டலக் கூட்டம்!

மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிவிப்பு!

ஈரோடு, ஆக.11-

கழக இளைஞர் அணி 5வது மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

மண்டலம் 5க்கு உட்பட்ட (கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, கரூர், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகரம், நீலகிரி) மாவட்ட மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

12.08.2024 திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் ஈரோடு கரூர் பைபாஸ் ரோடு சோலார் அருகில் மாணிக்கவாசகர் காலனியில் அமைந்துள்ள ஈரோடு நாடாளுமன்ற தொகுதி அலுவலகத்தில் 5வது மண்டலத்தில் உள்ள மாவட்ட மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம், இளைஞர் அணி தலைமையிலும், மாவட்ட அமைப்பாளர்கள் அக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : 1. கலைஞர் நூற்றாண்டு படிப்பகம்

2. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி

துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி ஏற்பாட்டின் விபரங்கள் கொண்டு வரவும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தின் கீழ்

நந்தனம் அரசு ஆடவர் கல்லூரி மாணவர்களுக்கு பற்று அட்டைகள்!

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஆக 11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card)வழங்கும் நிகழ்வினை காணொளி வாயிலாக சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் காட்சிப்படுத்தும் நிகழ்ச்சிக்கு அந்த கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவன் என்கிற வகையில் சிறப்பு விருந்தினராக கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ., முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card)வழங்கினார்.

இந்த இனிய நிகழ்வுக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜோதி வெங்கடேஸ்வரன் அவர்கள் தலைமை வகித்தார்.தமிழ் புதல்வன் திட்டத்தின் பொறுப்பு அலுவலர் முனைவர் ஜெயராணி வரவேற்புரை ஆற்றினார். முனைவர் அபிராமி அவர்கள் அறிமுக உரையாற்றினார்.

முனைவர் பரமகுருராஜ் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

முனைவர் செல்லதுரை அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவஞ்சேரி ஊராட்சியில், நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் முகாமில், வருவாய், மின்சாரம், நெடுஞ்சாலை, உள்ளாட்சி, பொதுப்பணி, காவல், உணவு பொருள் வழங்கல், வட்டார வளர்ச்சி, நீர்வளம், மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்த 200 க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் மற்றும் விண்ணபங்களை பொதுமக்களிடம் இருந்து பெற்று கொண்ட தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா. எம்.எல்.ஏ., தீர்வு காண அந்தந்த துறை அதிகாரிகளிடம் பரிந்துரை செய்தார், 10 நபர்களுக்கு விண்ணபங்கள் பெற்ற உடனே வரி ரசீது வழங்கினார், இந்நிகழ்வில் ஒன்றிய அவைத் தலைவர் சக்தி, ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ்பாபு மற்றும் பலர் பங்கேற்றனர்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, தமிழ்நாடு அரசு சார்பில், உடலுறுப்பு தானம் செய்யும் உன்னத மனிதர்களின் உடலுக்கு அரசு மரியாதைச் செலுத்தப் படுவதையொட்டி திருவண்ணாமலை, வட மணப்பாக்கத்தை சேர்ந்த யேகசுந்தரம் (60) என்பர், அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக கடந்த 3.8.2024 அன்று அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி, மூளைச்சாவு அடைந்தார். அவரது உறவினர்களின் முழு சம்மதத்துடன் அன்னாரது உடலுறுப்புகள் தானம் பெறபட்டு, அரசு விதிமுறைப்படி பதிவு செய்த நோயாளிகளுக்கு தமிழ்நாடு அரசு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்தின் வழியாக பதிவு செய்து காத்திருக்கும் தேவையான நோயாளிகளுக்கு தானமாக வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து யேகசுந்தரம் (60) அவர்களின் திருவுடலுக்கு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் சென்று மலர்மாலை அணிவித்து அரசு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அரசு ஸ்டாலின் மருத்துவமனை மருத்துவர்கள், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் மற்றும் குடும்பத்தினர் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஞா. மணிமாறன்

ஆகஸ்ட் 11 (1984)



மாணவ பருவம் தொட்டு கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 1958ல் கழக உறுப்பினராகி, 1966ல் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகி முழுநேர கழகப் பணியாற்ற தொடங்கினார்.

1969ல் 'கலைஞர் மன்றம்' என்ற அமைப்பை துவக்கி, அதன் செயலாளராகவும் பின்னர் 1971ல் சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 1984 வரை வாசுதேவநல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

'வரதராஜன் கலைக்குழு' எனும் கலைக்குழுவை துவக்கி அதன் மூலம் கழகத்தின் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரவிடச் செய்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

முன்னாள் 143 வது மாமன்ற உறுப்பினர்

சி.குப்பன் மறைவு!

மதுரவாயலில் இன்று இறுதிச் சடங்கு!

சென்னை ஆக 11-

சென்னை மாவட்ட முன்னாள் ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளரும் மயிலாப்பூர் 143 ஆவது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினருமான சி.குப்பன் உடல் நலக்குறைவால் திடீர் நேற்று (10.8.2024 சனிக்கிழமை) காலை 09 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும், கழகத்தினர் மலர்மாலைவைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் உடல் சென்னை மதுரவாயல் வேல் நகர் பகுதியில் உள்ள அவரது மகன் எம்.கே. பாலாவின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதி ஊர்வலம் இன்று (11.8.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10. மணி அளவில் நடைபெறுகிறது.